

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு கலைக்கல்லூரியில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சட்டமன்ற நாயகர் கலைஞர் இரண்டாம் நாள் கருத்தரங்கம் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் ஆகியோர் கருத்தரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.

### குமரியில் உள்ள

# திருவள்ளுவர் சிலை இரவிலும் ஒளிரும் வகையில் ஏற்பாடு!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் பேட்டி !

சென்னை, அக். 21 -

தமிழ்நாட்டிற்கு 2023 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் முடிய 8 மாதங்களில் 7,60,545 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், 19,11,87,624 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளார்கள் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர். க.மணிவாசன் முதன்மை செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா பங்கேற்றனர்.

இக்கூட்டத்தை தொடர்ந்து சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அளித்த பேட்டி வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 ல் ஆகஸ்ட் மாதம் முடிய 8 மாதங்களில் 7,60,545 ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் ஆகஸ்ட் மாதம் முடிய 8 மாதங்களில் 19,11,87,624 என உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். அதனடிப்படையில் கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் மேற்கொள்ளும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடம் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், பிச்சாவரம் சுற்றுலாத்தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

முட்டுக்காடு படகு இல்லத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் 200 நபர்கள் அமரும் வகையிலான இரண்டு அடுக்குகள் கொண்ட மிதவை உணவக கப்பல் அமைக்கும் பணி விரைந்து நடைபெற்று வருகின்றது. மாமல்லபுரத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் பொழுதுபோக்கிற்காக தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திலான ஒளிரும் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொல்லிமலையை பல்வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத்தலமாக மாற்றும் பணிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டிலும், உதகை படகு குழாமில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் மரவீடுகள், மரத்தின் மேல் வீடுகள், குடில் வீடுகள் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஜவ்வாது மலையில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஏலகிரி மலையில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரியில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் படகு சவாரி உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலையில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் சாகச சுற்றுலா, திறந்த வெளி முகாம்கள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் நடைபெற்று வருகின்றன.

'தென்னிந்தியாவின் ஸ்பா" என்று அழைக்கப்படும் குற்றாலத்தை ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுத்தும் பணிகளும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி ஆகிய சுற்றுலாத்தலங்களில் ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளும், தூத்துக்குடி கடற்கரையை ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுக்கள் மற்றும் கடற்கரை விளையாட்டுகள் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட கடற்கரை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரைப் பகுதியை ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுகள், கடற்கரை விளையாட்டு கள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா வளர்ச்சித்திட்டப்பணிகளை பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் என்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பையடுத்து

# நாவலூர் சுங்கச் சாவடியில் கட்டண வசூல் நிறுத்தம்!

## 19 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது! வாகன ஓட்டிகள் மகிழ்ச்சி!

சென்னை, அக். 21 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பை அடுத்து நாவலூர் சுங்கச்சாவடியில் கட்டணமின்றி வாகனங்கள் சென்று வருகின்றன. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சுங்கக் கட்டணத்தை ரத்து செய்த முதலமைச்சருக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

'கள ஆய்வில் முதலமைச்சர்' திட்டத்தின் கீழ் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்ட ஆட்சியர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார். மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

அப்போது பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சென்னை ராஜிவ் காந்தி சாலையில் சுங்கக் கட்டணம் வசூல் நிறுத்தப்படுவதாக அறிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பை தொடர்ந்து நாவலூர் சுங்கச்சாவடியில் நேற்று முன்தினம் காலை முதல் கட்டண வசூல் நிறுத்தப்பட்டது.

இதையடுத்து வாகனங்கள் கட்டணம் செலுத்தாமல் சென்று வருகின்றன. சாலையில் போக்குவரத்து நெரிசலின்றி செல்ல முடிவதாக வாகன ஓட்டிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். சுங்கக் கட்டண வசூலை நிறுத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மருத்துவ அணி சார்பில் நடைபெற்ற ரத்ததான முகாமில், ரத்தம் வழங்கியவர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இருவரும் வழங்கினர். இதில் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.65 லட்சம் மதிப்பீட்டில் ரயில்வே காலனி பள்ளியில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறைகளையும், ரங்கம் பாளையம் பகுதியில் சீர்மிகு திட்டத்தின் கீழ் ரூ.9.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிவியல் தொழில்நுட்ப (STEM) பூங்காவினையும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்து பார்வையிட்டார். நிகழ்வில் ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வெ.கி.ச.இளங்கோவன், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே.செல்வராஜ், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்

### ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.15.84 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சி திட்டப்பணிகள்!

## அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார்!

ஈரோடு, அக். 21 -

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், ரூ.15.84 கோடி மதிப்பீட்டிலான புதிய வளர்ச்சி திட்டப்பணிகளையும் திறந்து வைத்து மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா தலைமையில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வெ.கி.ச.இளங்கோவன், மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம் முன்னிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீரவைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார்.

அதுபோது அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழக மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்காக எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை முழுமையாக நிறைவேற்றுகின்ற வகையில், தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சி பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறுகின்ற வகையில் பல்வேறு திட்டப்பணிகளின் வளர்ச்சிக்காக அதிகப்படியான நிதியினை ஒதுக்கி தந்துள்ளார்கள்.

அதன்படி, இன்றைய தினம் ஈரோடு மாநகராட்சி, ரங்கம்பாளையம் பகுதியில், சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், ரூ.9.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிவியல் தொழில்நுட்ப (STEM) பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பூங்கா புதிய தொழில்நுட்பத்துடன் டிஜிட்டல் கோளரங்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவானது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத்தின் கோட்பாடுகளான செயல்முறையில் விளக்கம் அளிக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு இன்றைய தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, இன்றைய கல்வி முறைக்கேற்ப நல்ல புரிதலை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இங்கு இயக்கவியல், ஒலி, ஒளி, வேதியியல், உயிரியல் மற்றும் பண்பாட்டு அறிவியல் மற்றும் பல்வேறு தொழில்நுட்பங்களில் செயல்படும் மாதிரிகள் போன்ற அடிப்படை அறிவியல் கண்காட்சியுடன் நிறுவப்பட்டுள்ளது. அதே போன்று உள்விளையாட்டு அரங்கம், கண்காட்சிகள், கோளரங்கம், தொலைநோக்கியுடன் கூடிய கண்காணிப்பு குவிமாடம், விண்வெளி மண்டலம், சிற்றுண்டி சாலை, கழிப்பறைகள், பாதுகாப்பு அறை மற்றும் ஒலியத்துடன் கூடிய நுழைவு வாயில் என பல்வேறு சிறப்பம்சங்களுடன் இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ், ரூ.61.00 இலட்சம் மதிப்பீட்டில் ரயில்வே காலனி பள்ளியில் கட்டுப்பட்டுள்ள புதிய வகுப்பறைகளும், பெரியவலசு மாநகராட்சி துவக்கப்பள்ளியில் ரூ.15.00 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கழிப்பிடம், கருங்கல்பாளையம் செங்குட்டுவன் வீதியில், ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடம் மற்றும் ரூ.14.00 மதிப்பீட்டில் கட்டப்பட்ட கிராம நிர்வாக அலுவலகம், வைராபாளையம் பகுதியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடம், மாணிக்கம்பாளையம் அம்பேத்கார் காலனியில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சின்டெக்ஸ் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பணியினையும் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் ரூ.92.00 இலட்சம் மதிப்பீட்டில் ஜவுனி நகர் (மண்டலம் 1) ல் கட்டப்பட்டுள்ள இரவு நேர தங்கும் விடுதியும் என ரூ.12.84 கோடி மதிப்பீட்டிலான வளர்ச்சி திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அதே போன்று, மேலும், தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் சார்பில், ஈரோடு மாநகராட்சி, ரங்கம்பாளையம் பகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டிலும், ராஜாஜிபுரம் பகுதியில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டிலும், வில்லரசம்பட்டி, கருவில்பாறைவலசு பகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டிலும் என மாநகராட்சிக்குட்பட்ட 3 இடங்களில் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி, என ரூ.3.00 கோடி மதிப்பீட்டிலான புதிய வளர்ச்சி திட்டப்பணிகளை துவக்கி வைத்தும் என மொத்தம் ரூ.15.84 கோடி மதிப்பீட்டிலான புதிய வளர்ச்சி திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மக்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தங்கள் அன்பையும், ஆதரவையும் அளிக்க வேண்டுமென தெரிவித்தார்.

முன்னதாக, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் , மகளிர் திட்டத்தின் சார்பில், குமலன்குட்டை பகுதியில் ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட பூமாலை வணிக வளாகத்தினை திறந்து வைத்தார் மற்றும் அம்மாபேட்டை, பெருந்துறை, பவானி, ஈரோடு மாநகராட்சி ஆகிய பகுதிகளைச் சார்ந்த 14 மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ரூ.1.38 கோடி மதிப்பீட்டிலான வங்கி கடனுதவிகளையும் வழங்கினார்.

நிகழ்வுகளில் ஈரோடு துணை மேயர் வே.செல்வராஜ், மாநகராட்சி துணை ஆணையர் சுதா, மாநகர பொறியாளர் விஜயகுமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மைக்கேல், துணை மாநகர பொறியாளர் சண்முகவடிவு, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள் ப.க.பழனிச்சாமி சுப்பிரமணியம் ப.சசிகுமார் குறிஞ்சி என்.தண்டபாணி ஈரோடு வட்டாட்சியர் ஜெயகுமார், கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார் ப.க. பழனிசாமி, டி.எஸ்.குமாரசாமி மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினர்கள் ஜெகநாதன், மோகன் கொல்லம்பாளையம் சக்திவேல், குணசேகரன், சாந்தி பாலாஜி. ரமேஷ் இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் இளையகோபால் ஈரோடு மாநகர நிர்வாகிகள் விமல் (எ) நந்தகுமார் ஜி. சண்முகம், கே.சந்திரசேகர், இமயம் சிவக்குமார் பகுதி செயலாளர்கள் வி.சி.நடராஜன் பொ.ராமச்சந்திரன் வில்லரசம்பட்டி முருகேசன், க.ஸல்.சுமண குமார், அக்னி சந்துரு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், மாநகரத் துணை அமைப்பாளர் ஜாகிர் உசேன், கேபிள் செந்தில், வீரமணி சுள்ளான் எஸ்.ராஜேந்திரன், திலகவதி, சி.ஏ.கார்த்தி கே.டி. மகேஸ்வரன் உள்ளிட்ட உதவி செயற் பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் , அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ககன்யான் மாதிரி விண்கலம்

# இன்று விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டம்!

ஸ்ரீஹரிகோட்டா, அக். 21 -

ககன்யான் மாதிரி விண்கலம் இன்று ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தி சோதனை நடத்தப்படவுள்ளது.

விண்ணில் 400 கிலோ மீட்டர் சுற்றுவட்டப்பாதைக்கு மனிதக் குழுவினரை அனுப்பி, அவர்களைப் பத்திரமாக பூமிக்குத் திருப்பி அழைத்து வரும் ககன்யான் திட்டத்தை வருகிற 2025ம் ஆண்டு செயல்படுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. இதற்கான சோதனை ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்தி சோதனை செய்ய இஸ்ரோ திட்டமிட்டிருந்தது.

அதன்படி, முதல் சோதனை ராக்கெட் நாளை காலை 7 மணிக்கு ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தின் ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்தி சோதனை செய்யப்படவுள்ளது. crew escape system என்று அழைக்கப்படும், விண்வெளி வீரர்கள் ஆபத்தான நேரங்களில் தப்பிக்கும் வசதியுடன் கூடிய அமரும் பகுதி விண்ணில் செலுத்தி சோதனை செய்யப்பட உள்ளது.

இந்த சோதனை ராக்கெட் ஏவப்படுவதை ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள பார்வையாளர்கள் மாடத்தில் அமர்ந்து காண, ஆர்வம் உள்ளவர்கள் lvg.shar.gov.in என்ற இணையதள முகவரியில் பெயர் உள்ளிட்ட விபரங்களை முன்பதிவு செய்து கொள்ளலாம் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலா அமைச்சர் கா.ராமச்சந்திரன் பங்கேற்றார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் முதன்மைச் செயலாளர் மணிவாசன் மற்றும் முதன்மைச் செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தலைவர் / மேலாண்மை இயக்குனர் திருமதி.காகர்லா உஷா மற்றும் துறை அலுவலர்கள் உள்ளனர்.